ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS OF SRI LANKA

# பரீட்சகர் அறிக்கை

## AA3 பரீட்சை – 2017 யூலை

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு
## PROCESSES, CONTROLS AND AUDIT

---

**பொதுவான வியாக்கியானங்கள்**

செயன்முறை, கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (AA34) வினாப்பத்திரம் சுயகற்கைப் புத்தக அடிப்படையிலமைந்த ஒன்பது (9) கட்டாய வினாக்களை கொண்டது. இதில் **பிரிவு A** யில் ஒவ்வொன்றும் 5 புள்ளிகளைக் கொண்ட நான்கு (4) கட்டாய வினாக்களும், **பிரிவு B** யில் ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மூன்று (3) கட்டாய வினாக்களும், **பிரிவு C** யில் ஒவ்வொன்றும் 25 புள்ளிகளைக் கொண்ட 2 கட்டாய வினாக்களும் அடங்கின.

சுயகற்கைப் புத்தகத்தின் அடிப்படையிலமைந்த இந்த வினாக்களில் கோட்பாட்டுரீதியான அறிவு மற்றும் நடைமுறைச் சூழலில் அதன் பிரயோகம் பற்றி பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகள் சுய கற்கைப் புத்தகத்தை நன்கு கற்று பிரயோக ரீதியான வினாக்கள் உட்பட கடந்தகால பரீட்சை வினாக்களை பயிற்சி செய்திருப்பின் அவர்கள் இலகுவாக தேவையான புள்ளிகளை பெற்று சித்தியடைந்திருக்க முடியும்.

பரீட்சைப் பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன. கணிசமான பரீட்சார்த்திகள் உயர்ந்த புள்ளிகளை பெற்றிருப்பது அவர்கள் பாடத்தினை நன்கு கற்று அந்த அறிவை நடைமுறைச் சூழலிலும் பிரயோகிக்கக்கூடியதாக இருந்தமையாகும். மேலும், கணிசமானோர் மிகவும் குறைவான புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அவர்கள் எழுதிய விடைகளிலிருந்து அவர்கள் சுயகற்கைப் புத்தகத்தை கற்காமலும் பயிற்சி செய்யாமலும் இருந்துள்ளமையை காணலாம்.

அனேகமான பரீட்சார்த்திகள் எல்லா வினாக்களுக்கும் விடையெழுத முயற்சித்தபோதிலும் சில பகுதிகளுக்கு அவர்கள் விடையளிக்க முடியவில்லை. அவ்வாறு விடையளிக்க முடியதமைக்கு தவறான கால முகாமைத்துவம், போதிய அறிவின்மை, பரீட்சை நுட்பங்கள் தெரியாமை ஆகியன காரணங்களாக இருக்கலாம். அத்துடன், விடைகளை திருத்தும்போது கீழ்வருவன அவதானிக்கப்பட்டன:

- பகுப்பாய்வுத் திறமை (analytical skills) இல்லாமை.
- கையெழுத்து தெளிவாக இல்லாமை.
- அதிக புள்ளிகளைக் கொண்ட வினாக்களுக்கு சுருக்கமாக விடையெழுதல்.
- குறைவான புள்ளிகளைக் கொண்ட வினாக்களுக்கு விரிவாக நீண்ட) விடையெழுதல்.
- வினாவுக்கு தொடர்பற்ற விடைகளை எழுதல்.
- விடையெழுத திட்டமிடாது இறுதியில் தொடர்பற்ற விடைகளை வழங்குதல்.
- வினாப்பத்திரத்தில் இணைந்துள்ள **வினா வினைச்சொற்களை** கவனத்திற் கொள்ளாமை.
- பரீட்சகரின் எதிர்பார்ப்பினை விறங்கிக்கொள்ளாமை.

## பிரிவு A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

**வினா இல. 01** (05 புள்ளிகள்)

பகுதி A யில் தொழிற்பாட்டின் ஆரம்பக் கட்டத்திலும் ஒரு ஆண்டின் பின்னரும் வியாபாரம் ஒன்றின் குறிக்கோள்கள் பற்றி வினவப்பட்டது. பகுதி B யில் வியாபாரமொன்றில் தாக்கம் செலுத்தும் சமூக, கலாச்சார காரணிகள் பற்றி பரீட்சிக்கப்பட்டது.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு திருப்திகரமாக இருந்தது. பல பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெற்றனர்.

எனினும்,, சில பரீட்சார்த்திகள் தொடர்பற்ற விடைகளை ஏழுதியிருந்தனர். அவ்வாறு எழுதிய தொடர்பற்ற விடைகளுக்கு உதாரணம்: இலாபத்தை உச்சப்படுத்தல், முதலீட்டை மீளப்பெறல், குறைந்த கிரயத்தில் உணவு வழங்கல், வியாபாரங்களுக்கு இடையில் போட்டிகளை இனம் காணல், நுகர்வோர் பொருளின் கேள்வியை அறிதல், வியாபார விற்பனையை அதிகரித்தல், காசு முகாமைத்துவம், சந்தைக்கு புதிய பொருட்களை அறிமுகப்படுத்தல் ஆகியன. .

**பகுதி A (b)** க்கான விடைகளில் வியாபாரத்தை பரிப்பு வரையறுத்த கம்பனியாக மாற்றுதல், விரய மற்றும் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம், அதிகரித்த மூலதன முதலீடு, நீடித்து நிலைத்திருத்தல், விற்பனை ஊக்குவிப்பு செயற்திட்டங்கள், புதிய உற்பத்திப் பொருளுக்கான தேடல், மாணவர்களுடன் நல்ல தொடர்பினை பேணுதல் போன்ற தொடர்பற்ற விடைகள் காணப்பட்டன.

**பகுதி B** க்கான விடைகளில் சில பரீட்சார்த்திகள் வியாபாரத்தை பாதிக்கின்ற சமூக மற்றும் கலாச்சார காரணிகள் எவை என புரிந்துகொள்ளாது, விரைவு உணவுகளில் நாட்டத்தில் வீழ்ச்சி, சிறுவர்கள் விரைவு உணவுகளை வாங்குவதற்கு பெற்றோர் அனுமதிக்காமை, உணவு பற்றிய சுகாதார அக்கறை, தனியார் வகுப்புக்களுக்கு அண்மையில் வியாபாரத்தை நிறுவுதல், அரச சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தாக்கம் போன்ற தொடர்பற்ற விடைகள் எழுதினர்.

**வினா இல. 02** (05 புள்ளிகள்)

இந்த வினாவின் **பகுதி A** யில் இடரை குறைக்கும் இரு வழிகள் பற்றியும் **பகுதி B** யில் இடர் குறைப்பு முறைகள் மூன்றினைப் பற்றிய விளக்கம் பற்றியும் பரீட்சிக்கப்பட்டது.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த பெறுபேறு திருப்திகரமாக இருந்ததுடன், அனேகமானோர் முழுப்புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

எனினும் சில பரீட்சார்த்திகள் **பகுதி A** க்கு மோசடி இடர், கட்டுப்பாட்டு இடர், இடரை விபரித்தல், இடரை மதிப்பிடுதல், மதிப்பிட்ட இடருக்கு பதிலிறுத்தல், அனுமதிப்பு மட்டங்களை நிர்ணயித்தல், எதிர்மறை இடரை கொண்டிருத்தல், சந்தர்ப்ப இடர், இடர் நிகழமுன்னரே அதனை இனங்காணல், ஊடுசெயல்களில் இடர், மதிப்பிடுதலில் இடர் ஆகிய தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி B** க்கான விடைகளில் கணக்காய்வு இடரினை எவ்வாறு குறைத்தல், கணக்காய்வில் இடர் மதிப்பீட்டை இனங்காணல், இடர்க் கட்டுப்பாடுகள், நிதி நிறைவேற்று அலுவலரால் கொடுப்பனவுகளை அங்கீகரித்தல், இடரை தவிர்ப்பதற்கு கணக்காய்வாரள் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், பிரச்சினைகளை பகுப்பாய்தல், இடர் நிகழமுன் நடவடிக்கை எடுத்தல், இடரை குறைக்க மீதிகளின் கணக்கிணக்கம் போன்ற தொடர்பற்ற விடைகள் காணப்பட்டன.

**வினா இல. 03** (05 புள்ளிகள்)

இந்த வினாவின் **பகுதி A** யில் தொழில்சார் சந்தேக மனப்பாங்கு (Professional Skepticism) எனும் பதம் பற்றியும், **பகுதி B** இல் ஒரு கணக்காய்வாளர் தொழில்சார் தீர்மானங்களை பிரயோகிக்க வேண்டிய 3 விடயங்கள் பற்றியும் பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது.

**பகுதி A**- ஒட்டுமொத்த பெறுபேறு சராசரி மட்டத்தில் காணப்பட்டது. பல பரீட்சார்த்திகள் **பகுதி A** யில் உயர்ந்த புள்ளிகள் பெற்றிருந்தனர். இருந்தபோதிலும் கீழ்வருவனபோன்ற தொடர்பற்ற விடைகளும் காணப்பட்டன: தொழில்சார் சந்தேக மனப்பாங்கானது ஒருமைப்பாடு, சுயாதீனம், குறிக்கோள், இரகசியம் பேணல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டது.∵ சந்தேக மனப்பாங்கானது தொழில்சார் தீர்மானம் சம்பந்தப்பட்டது.∵ கணக்காய்வுச் சான்றுகளை இனங்காணல், கணக்காய்வாளரின் தொழில்சார் நடத்தை, பொருத்தமான போதுமான கணக்காய்வுச் சான்றை பெறுவதற்கு திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் போன்றன.

**பகுதி B**- ஒட்டுமொத்த பெறுபேறு திருப்திகரமாக இருக்கவில்லை. ஒருசிலர் மாத்திரம் முழுப் புள்ளிகளை பெற்றனர். சிலர் நிலையான சொத்துக்களை அறுதியிடலில், நிதித் துறையில், முகாமைத் துறையில், தொழிற்பாட்டுத் துறையில், அகக் கணக்காய்வில், சட்டநியதிக் கணக்காய்வில், சான்றுப்ப:டுத்தலில், தரக் கட்டுப்பாட்டில், இடர் முகாமைத்துவத்தில், தொழில் சார் தகுதியில் தொழில்சார் தீர்ப்பு பயன்படுத்தப்பட வேண்டும் என்பது போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 04** (05 புள்ளிகள்)

**பகுதி A** யில் கணக்காய்வு நிறுவனம் கடைப்பிடிக்கவேண்டிய தரக் கட்டுப்பாட்டு கொள்கைகள் மற்றும் விதிமுறைகள் பற்றியும், **பகுதி B** யில் கனிஷ்ட கணக்காய்வுக் குழாம் அங்கத்தவர் ஒருவரின் வேலையை மீளாய்வு செய்யும்போது சிரேட்ட அங்கத்தவர் உறுதிப்படுத்தவேண்டிய 3 விடயங்கள் பற்றியும் பரீட்சிக்கப்பட்டது.

இந்த வினாவுக்கான பெறுபேறுகள் மிகவும் மோசமாக இருந்தன. ஒரு சில பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெறக்கூடியதாக இருந்தபோதிலும், கணிசமான பரீட்சார்த்திகள் புள்ளிகள் எதனையும் பெற்றிருக்கவில்லை.

**பகுதி A** க்கு வியாபார தொழிற்பாடுகளின் வினைத்திறனை அதிகரித்தல், இலகுவில் விளங்கக் கூடிய வகையில் கணக்காய்வு அறிக்கைகளை வழங்குதல், நல்ல அபிப்பிராயத்தை வழங்க அனுபவம்பெற்ற தகைமையுடைய கணக்காய்வாளரை கொண்டிருத்தல், பொருண்மையான பிறழ்கூற்றினை தவிர்ப்பதற்கு கணக்காய்வு ஊழியர்களுக்கு பயிற்சி வழங்குதல், கணக்காய்வு உதவியாளரின் தவறுகளை கட்டுப்படுத்தல், கணக்காய்வு உதவியாளர்களின் இயலுமையை மேம்படுத்தல், அகக்கட்டுப்பாட்டின் தரத்தை உறுதிப்படுத்தல், கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மற்றும் விளைவுத்திறனை உறுதிப்படுத்தல் போன்ற தொடர்பற்ற விடைகள் தரப்பட்டிருந்தன.

**பகுதி B** க்கு கணக்காய்வு அறிக்கை உண்மையானதும் நேர்மையானதுமென உறுதிப்படுத்தல், சட்டம், ஒழுங்குவிதி மற்றும் நன்னெறிக் கோவைகளுக்கு இசைவாக நடத்தல், கனிஷ்ட ஊழியருக்கு மதிப்பளித்தல், ஒவ்வொரு கணக்காய்வு ஊழியரினதும் வேலையை விளங்கிக் கொள்ளல், சிரேஷ்ட அங்கத்தினர் கனிஷ்ட அங்கத்தினரின் கணக்காய்வுச் சான்றுகளை சரிபார்த்தல், கனிஷ்ட கணக்காய்வுஊழியரின் இரகசியம்பேணும் ஆற்றலை செவ்வைபார்த்தல், கணக்காய்வை இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல் ஆகிய தொடர்பற்ற விடைகள் காணப்பட்டன.

## பிரிவு B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

**வினா இல. 05** (10 புள்ளிகள்)

**பகுதி A** யில் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் (assurance engagement) என்பதனை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இந்த பகுதிக்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் இருந்தன. முழுப்புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளும் உள்ளனர். சில பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் என்றால் என்னவென்றே தெரியவில்லை. அவர்கள் அளித்த தவறான விடைகளில் சில: அபிப்பிராய தரத்தினை அதிகரிப்பதற்கு.∴. கம்பனியின் கடந்தகால செயற்பாடுகள் பற்றிய அபிப்பிராத்தினை தெரிவிப்பதற்கு.∴. விசேட தேவை நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கு.∴. சூழல்சம்பந்தமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு, வங்கிக்கடன் பெறுவதற்கு உறுதிப்பாடு வழங்குதல் போன்ற தேவைகளுக்கு உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் மேற்கொள்ளப் படுவதாக இருந்தன.

**பகுதி B** யில் தரப்பட்ட தருநிலை ஆய்வில் தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கணக்காய்வு நிறுவனம் மேற்கொள்ளவேண்டிய கணக்காய்வு ஈடுபடுத்தலின் வகையை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. எனினும் பல பரீட்சார்த்திகளுக்கு வரையறுக்கப்பட்ட மற்றும் நியாயமான உறுதிப்பாடுகளுக்கு இடையில் வித்தியாசத்தை விளங்கிக்கொள்ள முடியாது இருந்தமையால், இந்தப் பகுதிக்கான பெறுபேறுகள் திருப்திகரமாக இருக்கவில்லை. இவர்களின் விடைகள் நியாயமான உறுதிப்பாட்டு அடிப்படையில் இருந்தமையால் அந்த விடைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படவில்லை. இதனைத் தவிர வினாவில் தரப்பட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் ஈடுபடுத்தல் வகையை குறிப்பிடாது அகக் கணக்காய்வு, தொழிற்பாட்டுக் கணக்காய்வு, நிதிக் கணக்காய்வு, தொடர்புபட்ட சேவை ஈடுபடுத்தல்கள் போன்ற தொடர்பே இல்லாத விடைகளும் எழுதப்பட்டிருந்தன.

**வினா இல. 06** (10 புள்ளிகள்)

**பகுதி A** யில் கணக்காய்வுச் சான்றுகளை சேகரிக்கும்போது சான்றுகளின் நம்பகத் தன்மையை அதிகரிக்கும் நான்கு (4) வழிகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் உயர் புள்ளிகளை பெற்றிருந்தனர். அனேகமானோரால் சராசரி மட்டப் புள்ளிகளை மாத்திரம் பெறக்கூடியதாக இருந்தது. பல விடைகள் நிதிக்கூற்றுகளிலிருந்து தகவல்களை சேகரித்தல், சான்றுகளை 'சேகரிப்பதில் தொழில்சார் சந்தேக மனப்பான்மை மற்றும் தீர்ப்பினை பிரயோகித்தல், மாதிரியின் அளவை அதிகரித்தல், கணக்காய்வுச் சான்றுகளை சேகரிக்க அதிக நேரம் செலவிடுதல், அதிக இடருடைய பகுதிகளை செவ்வைபார்த்தல், நன்நெறித் தேவைப்பாடுகளுக்கு இசைவாக நடத்தல் போன்ற தொடர்பற்ற விடைகளாக இருந்தன.

**பகுதி B** யில் தரப்பட்ட தருநிலை ஆய்வில் உள்ள தரவுகளின் அடிப்படையில் அதிகரித்த குத்தகை வாடகைக்கான கணக்காய்வுச் சான்றினை பெறுவதுபற்றிய பரீட்சார்த்தியின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகளின் விடைகளிலிருந்து இந்தப் பகுதிபற்றிய அவர்களின் அறிவு மிகவும் மோசமாக இருப்பது தெரியவந்ததுடன், பலர் வினாவில் கேட்கப்பட்டதனை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளனர். அவர்களால் புள்ளிகள் பெறமுடியவில்லை. அனேகமானோர் நிதிக் கூற்றுக்களிலிருந்து சான்று பெறுதல், கட்டிடத்தை அவதானித்தல், எவ்வாறு மேற்கொள்வது எனக் கூறாது பகுப்பாய்வு விதிமுறைகளை மேற்கொள்தல் போன்ற தவறான விடைகளை எழுதினர். சிலர் விபரச் சோதனை, வலுவளிப்பு விதிமுறைகள், கணக்கீட்டு நியமங்களை சரியாக பிரயோகித்தல், சட்ட அலுவலரை விசாரித்தல் போன்ற பொதுவான விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 07** (10 புள்ளிகள்)

**பகுதி A**: உறவுமுறை சார்ந்தோர் ஊடுசெயல்கள் மற்றும் மீதிகள் தொடர்பில் முகாமையின் பொறுப்புக்கள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. விடைகள் மிகவும் மோசமாக இருந்தன. ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியாக விடையளித்து அதிக புள்ளிகள் பெற்றனர். அனேக பரீட்சார்த்திகள் உறவுமுறைத் தரப்பினருடன் சட்டரீதியான ஊடுசெயல்களை செய்வதற்கு முகாமை பொறுப்பாதல், உரியமுறையில் சகல தகவல்களை வழங்குதல், நிதிக்கூற்றுக்களை உரிய காலத்தில் தயாரித்தல், கணக்காய்வுக்குத் தேவையான தகவல்களை உரியகாலத்தில் வழங்குதல், சகல உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களை அவர்களுக்கு தெரிவித்தல் போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி B:** உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களை இனங்காண்பதற்கு ஐந்து (5) கணக்காய்வு விதிமுறைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இப் பகுதிக்கான விடைகள் மிகவும் மோசமாக இருந்தன. சுயகற்கைப் புத்தகத்தில் இதற்கான விடைகள் நேரடியாக தரப்பட்டுள்ளன. ஒருசில மாணவர்கள் மாத்திரம் முழுப்புள்ளிகள் பெற்றனர். அனேகமானோர் கணக்காய்வாளர் போதிய பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெறவேண்டுமெனவும் (எவ்வாறு செய்யவேண்டும் என தெரிவிக்காது), உறவுமுறைத் தரப்புடன் தொடர்புபடுத்தாது பொருட் பெறுவனவுக் குறிப்பினை செவ்வைபார்க்க வேண்டுமென மாத்திரம் குறிப்பிட்டும் தொடர்பற்ற வகையிலான விடைகளை எழுதினர். சிலர் எவ்வாறு செய்வதென குறிப்பிடாது கட்டுப்பாட்டுச் சோதனை, வலுவளிப்பு விதிமுறைகள் எனக் குறிப்பிட்டும், உறவுமுறைத் தரப்பினரை விசாரித்தல், விசுவாசமாக செயற்பட்டுள்ளார்களா எனச் செவ்வைபார்த்தல் போன்ற விடைகளை எழுதினர்.

**பகுதி C:** உறவுமுறை சார்ந்தோர் ஊடுசெயல்கள் மற்றும் மீதிகள் தொடர்பில் முகாமைப் பிரதி நிதித்துவத்தினை பெறுவதன் நோக்கங்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இப் பகுதிக்கான விடைகள் மிக மோசமாக இருந்தன. கீழ்வருவன போன்ற தொடர்பற்ற விடைகள் தரப்பட்டன: உறவுமுறை சார்ந்தோர் ஊடுசெயல் தொடர்பில் முகாமை நல்ல அபிப்பிராயத்தை தெரிவிக்க வேண்டும் ∴ உறவுமுறை சார்ந்தோர் ஊடுசெயல்களை செவ்வை பார்ப்பதற்கு முகாமையானது முகாமைப் பிரதிநிதித்துவத்தை கணக்காய்வாளருக்கு வழங்குதல் வேண்டும் ∴ உறவுமுறை தரப்பினருடனான சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகள் பற்றிய தகவல்களை வழங்க வேண்டும் ஆகியன.

## பிரிவு C

இரண்டு (02) கட்டாயமான வினாக்கள்

**வினா இல. 08** (25 புள்ளிகள்)

**பகுதி A:** இந்த வினா தருநிலை ஆய்வொன்றின் அடிப்படையில் அமைந்தது.

**பகுதி (a)**: இதில் பொருட் கோரிக்கைக் குறிப்பில் (MRN) உள்ளடக்கவேண்டிய மூன்று முக்கிய விடயங்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. இலகுவான இந்த வினாவுக்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்திற்கு மேலாக காணப்பட்டது. அனேக பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகள் பெற்றுள்ளனர். எனினும் சிலர் மூலப் பொருட்களின் தரம், உற்பத்திசெய்த உருப்படிகளின் எண்ணிக்கை, கொள்வனவுசெய்த உருப்படிகளின் கிரயம், அலகுப் பெறுமதி, களஞ்சியத்தில் உள்ள கணியம், தரம் ஆகிய தொடர்பற்ற விடைகள் எழுதி புள்ளிகள் எதுவும் பெறவில்லை.

**பகுதி (b)-(i)**: இதில் உற்பத்திக் கட்டளைகள் வாடிக்கையாளர் கட்டளைகளின் அடிப்படையில் வழங்கப்படுவதனை உறுதிசெய்வதற்கான கணக்காய்வு விதிமுறைகள் பற்றிக் கேட்கப்பட்டது. இலகுவான இந்த வினாவுக்கு பல பரீட்சார்த்திகள் ''கட்டளையின் இலாபத்தினை சரிபார்த்தல், மறுதலிக்கப்பட்ட கட்டளைகளை செவ்வைபார்த்தல், கையொப்பங்களை சரிபார்த்தல், கட்டளை இட்ட கணியத்தை வாடிக்கையாளரிடம் உறுதிப்படுத்தல், அனுப்பப்படமுன் வாடிக்கையாளர் கட்டளைகள் சரிபார்க்கப்படல்'' போன்ற தவறான விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (b) –(ii)**: இப் பகுதியில் *வலுவான உற்பத்திக் கட்டளை கிடைத்தால் மாத்திரம் பொருட் கோரிக்கைக் குறிப்பு வழங்கப்படும்* என்பதை உறுதிப்படுத்த கணக்காய்வு விதிமுறைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அகே பரீட்சார்த்திகள் ''செயன்முறையின்போது விரையத்தை குறைத்தல், கையொப்பங்களை சரிபார்த்தல், வாடிக்கையாளர் கட்டளைகளை சரிபார்த்தல், உற்பத்திக் கட்டளைகளை சரிபார்த்தல், கட்டளைகள் ர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்க்க உற்பத்திக் கட்டளைகளை பரீட்சித்தல் ஆகிய பொருத்தமற்ற விடைகளுடன், சரிசெய்தற் கட்டப்பாடு, அங்கீகாரம், காரணம் குறிப்பிடாது முகாமையை விசாரித்தல், ஆகிய பொதுவான கூற்றுக்களை எழுதியிருந்தனர்.

**பகுதி (b)-(iii)**: பொருட்கள் வழங்கல்களை பொருட் கோரிக்கைகளுடன் சரிபார்த்தலை உறுதி செய்வதற்கு கணக்காய்வு விதிமுறைகள் கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் கட்டளைகளை செவ்வைபார்த்தல், கையொப்பங்களை சரிபார்த்தல், வினாவுக்கு எவ்வகையில் தொடர்பானது என்பதனை விபரிக்காமல் கண்டுபிடித்தற் கட்டுப்பாடு, மீள்கணிப்பீடு, மீள் தொழிற்பாடு, தொட்டி அட்டையுடன் ஒப்பீடு (எதனையென குறிப்பிடாது) போன்ற தொடர்பற்ற விடைகளை ஏழுதினர்.

**பகுதி (b)-(iv)**: இந்தப் பகுதியில் முற்றுப்பெற்ற பொருட்கள் களஞ்சிய நிறைவேற்று அலுவலர் 3-வழிப் பொருத்தம்காணலை (three-way matching) மேற்கொள்வதனை உறுதி செய்வதற்கு கணக்காய்வு விதிமுறைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அனேகமான பரீட்சார்த்திகள் களஞ்சியத்தில் அவசியமற்ற பொருட்களை களஞ்சியப்படுத்துவதை தடுத்தல், உற்பத்திச் செயன்முறையில் வினைத்திறனை செவ்வைபார்த்தல், ஆகிய தொடர்பற்ற விடைகளையும், விபரங்களை பரீட்சித்தல், கண்டுபிடித்தற் கட்டுப்பாடு, அவதானித்தல், மீள்கணிப்பீடு ஆகிய பொதுவான விடைகளையும் எழுதியிருந்தனர்.

**பகுதி (b)-(v)**: இங்கு விற்பனைப் பிரிவால் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்த தேவையான கணக்காய்வு விதிமுறைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இந்தப் பிரிவுக்கான விடைகள் மிகவும் மோசமாக இருந்தன. பல பரீட்சார்த்திகள் மிகையான தொக்குகளை விற்பனை செய்வதை தவிர்த்தல், தொக்குகளை மிகையாக மதிப்பிடல், பயன்படுத்திய மூலப் பொருட்களின் கிரயத்தை விசாரித்தல், செய்யப்பட்ட வேலைகளின் நம்பகத்தன்மை மற்றும் செம்மையினை சரிபார்த்தல் போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (c):** உரிமம் மற்றும் அதன் சூழல் பற்றிய விளக்கத்தினை பெறுவதற்கு கணக்காய்வாளர் மேற்கொள்ளவேண்டிய மூன்று (3) கணக்காய்வு விதிமுறைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இந்தப் பகுதிக்கான விடைகள் சராசரி மட்டத்திற்கு மேலாக காணப்பட்டது. பல மாணவர்கள் கடன்பட்டோர் / கடன்கொடுத்தோரிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் பெறுதல், கணக்காய்வாளர் உரிமத்துடன் நெருக்கமாக வேலைசெய்தல், உரிமத்தின் இடர்களை குறைத்தல், கணக்காய்வு அறிக்கையினை காலம் தாழ்த்தாது வழங்குதல் ஆகிய தவறான விடைகளை எழுதியுள்ளனர்.

**பகுதி (d):** இப் பகுதியில் தரப்பட்ட கம்பனியொன்றின் விற்பனையை பரிசோதித்தலில் கவனம் செலுத்தவேண்டிய மூன்று (3) நிதிக்கூற்று உறுதிப்பாடுகள்பற்றி வினவப்பட்டது. பெறுபேறுகள் சராசரிக்கு மேலாக இருந்தது. கணிசமான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெற்றனர். சில பரீட்சார்த்திகள் ஒப்பிடற்தகவு மற்றும் சோதனை ஆகியவற்றை நிதிக்கூற்று உறுதிப்பாடாக கருதியதால் புள்ளிகள் பெறவில்லை. மேலும், பல பரீட்சார்த்திகள் விற்பனைப் பட்டியல்கள், கடன்பட்டோர், வருமானம், நிதிநிலைக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள், காசுப்பாய்வுக் கூற்று ஆகியவற்றை செவ்வைபார்த்தல் போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்

**பகுதி <u>B</u>**

**பகுதி (B)-(a):** இந்த வினாவில் கணனிப் பிரயோகம் ஒன்றினை விருத்தி செய்தலில் தகவற் தொழில்நுட்ப பொதுக்கட்டுப்பாடுகளுக்கு இரு (2) உதாரணங்கள் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெறுபேறுகள் மிக மோசமாக இருந்தது. ஒருசில பரீட்சார்த்திகள் மாத்திரம் முழுப் புள்ளிகள் பெற்றனர். ஏனையோர் பதிப்புரிமை பெறுதல், எக்ஸெல்லை (excel) பயன்படுத்தல், அனுமதிப் பத்திரம் பெறுதல், வைரஸ் எதிர்ப்புப் பொதிகளை பெறுதல், சுயமான கணிப்பீடு போன்ற தவறான விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (B)-(b):** இவ்வினாவில் தரவுக் கோப்புக்களில் அதிகாரமற்ற திருத்தங்களை தடைசெய்யும் தகவற் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகளுக்கு இரு (2) உதாரணங்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் கடமைப் பகிர்வு, படப்பிப்புக் கருவிகளை பொருத்தல், பிரதான வழங்கியும் (server) கணனிகளும் மூடிய அறைகளுள் வெக்கப்படல், வைரஸ்காப்புப் பொதிகளை பயன்படுத்தல், புறக் களஞ்சியப்படுத்தல் அல்லது பென்டிரைவ் அல்லது ஹார்ட் டிஸ்க்கில சேமித்தல் போன்ற தொடர்பற்ற விடைகளை எழுதி புள்ளிகளை பெறவில்லை.

**பகுதி (B)- (c):** தொடர்ச்சியான தொழிற்பாட்டை உறுதிசெய்வதற்கான தகவற் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகளுக்கு இரண்டு (2) உதாரணங்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. மிகக் குறைந்த எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் மாத்திரம் முழுப் புள்ளிகளை பெற்றனர். அனேக பரீட்சார்த்திகள் கணனிகளை புத்தூட்டல், சகல கைமுறை முறைமைகளையும் கணனிமயப் படுத்தல், கடவுச்சொற் பாகாப்பு, புதிய பிரயோக, தொழிற்பாட்டு முறைமைகளின் பிரயோகம், பயன்படுத்துனருக்கு வெவ்வேறு கடவுச் சொற்களை வழங்குதல் ஆகிய தவறான விடைகளை எழுதி புள்ளிகள் எதனையும் பெற்றிருக்கவில்லை.

**பகுதி (B)-(d):** செயற்கூற்றுக்களுக்கு (programme) அனுமதியற்ற மாற்றங்களை கண்டுபிடிக்க அல்லது தடைசெய்ய தேவையான தகவற் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சிலர் தீச்சுவர் (firewalls), அனுமதிப்பத்திரம் பெறல், கைமுறை முறைமைகளை கணனிமயப்படுத்தல், நியாயத் தன்மையை செவ்வை பார்த்தல், மற்றைய பிரயோகங்களை செவ்வைபார்த்தல், புதிய வெளியீடுகளை நிறுவுதல் ஆகிய தவறான விடைகளை எழுதினர்.

**வினா இல. 09** (25 புள்ளிகள்)

**பகுதி <u>A</u>**

**பகுதி A –(a):** இந்தப் பகுதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அறுதியிடுவதற்கு கணக்காய்வாளர் மேற்கொள்ளும் மூன்று (3) கணக்காய்வு விதிமுறைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெறுபேறுகள் சராசரி மட்டத்திற்கு மேலாக இருந்தன. சிலர் முழுப்புள்ளிகளை பெற்றிருந்தனர். எனினும், நிதிக்கூற்றுக்களின் வெளிக்காட்டல்களின் பகுப்பாய்வு, கட்டுப்பாட்டுச் சோதனையின் பயன்பாடு, கணக்கீட்டு நியமங்களின் பயன்பாடு, நிலையான சொத்துக்களை செவ்வைபார்க்க வலுவளிப்பு விதிமுறைகளின் பயன்பாடு போன்ற தவறான விடைகளை சிலர் எழுதியிருந்தனர்.

**பகுதி A-(b):** கட்டுப்பாட்டுச் சோதனைகள் மற்றும் வலுவளிப்பு விதிமுறைகளுக்கு இடையிலான வேறுபாடுபற்றி இந்தப் பகுதியில் வினவப்பட்டது. அனேகமான பரீட்சார்த்திகள் இதற்கு திருப்தி கரமாக விடையளிக்கவில்லை. ஒருசிலர் மாத்திரம் சரியாக விடையெழுதி முழுப்புள்ளிகளை பெற்றிருந்தனர். அனேகமான விடைகளில் கட்டுப்பாட்டுச் சோதனையானது மோசடிகளையும் வழுக்களையும் தடுப்பதற்கான கட்டுப்பாடுகள் எனவும், இது அகக் கட்டுப்பாடு பற்றியது எனவும், தகவல்களின் சேர்க்கை எனவும், வழுக்களை கண்டுபிடித்துத் திருத்துதல் எனவும் குறிப்பிட்டிருந்த அதேவேளை, வலுவளித்தல் விதிமுறை மோசடிகளை குறைத்தல் எனவும், மோசடிகள் மற்றும் வழுக்களை உறுதிப்படுத்தல் எனவும், சட்டத் தேவைப்பாடு எனவும், மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் எனவும், விடயங்களின் ஒட்டுமொத்தப் பகுப்பாய்வு மற்றும் செயற்பாடொன்றின் உறுதிப்படுத்தல் எனவும் சம்பந்தமில்லாத விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி B**

**பகுதி B (a)**: தருநிலை ஆய்வில் தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீதான பொருத்தமான கணக்காய்வு அபிப்பிராயத்தை இனங்காணும்படியும், மூலதன மற்றும் வருமான செலவினங்களுக்கு இடையிலான வேறுபாட்டை குறிப்பிடும்படியும் கேட்கப்பட்டது. அனேகமான பரீட்சார்த்திகள் மூலதன மற்றும் வருமான செலவினங்களுக்கு இடையிலான வேறுபாட்டை இனம்காணவில்லை. மேலும், அவர்களுக்கு பொருண்மைமட்டத்தின் கருத்து தெரியவில்லை. வருமானச் செலவினமாக காட்டிய புனர்நிர்மானச் செலவு ரூபா2,500,000/- இனை இனங்காண கேட்கப்பட்டது. சிலர் இதனை சரியாக இனங்காணவில்லை. இந்த வினாவுக்கான பெறுபேறு திருப்திகரமாக இருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் செம்மையாக்கப்படாத இடத்து அழுத்தப் பந்தி உட்படுத்த வேண்டுமெனவும், வேறுசிலர் கணக்காய்வாளர் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தனர்.

**பகுதி B (b)**: இந்தப் பகுதியில் கணக்காய்வாளர் அறிக்கையில் கணக்காய்வு அபிப்பிராயப் பந்தி தவிர்ந்த மூன்று (3) மூலகங்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. மிகவும் இலகுவான இந்தக் வினாவுக்கான பெறுபேறுகள் நன்றாக இருந்ததுடன் பலர் முழுப்புள்ளிகள் பெற்றனர். எனினும், சிலரது விடைகள் கணக்காய்லுச் சான்று, கணக்காய்வு வேலைத் தாள்கள், கணக்காய்வின் நோக்கெல்லை, கணக்காய்வுக் கட்டணம், சான்றுகளை சேகரிக்கும் முறை போன்ற தொடர்பே இல்லாத விடைகளாக இருந்தன.

**பகுதி C**

**பகுதி C (a):** தரப்பட்ட தருநிலை ஆய்வில் தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அடிப்படைக் கோட்பாடுகளுடன் இசைவதன் இரண்டு (2) அச்சுறுத்தல்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் இருந்தது. ஒருசிலர் சரியான விடையெழுதி முழுப்புள்ளிகள் பெற்றனர். அனேகமானோர் எழுதிய தவறான விடைகளுள் நிதிசார் அச்சுறுத்தல்கள், வேலைச் சந்தர்ப்பங்கள் பற்றிய உடன்படிக்கை, தொழில்சார் நடத்தையும் சுயாதீனமும், முகாமையுடன் பிணக்கு ஆகியவை அடங்கியிருந்தன.

**பகுதி C (b)**: இந்த பகுதியில் AAT ஸ்ரீலங்கா அங்கத்தினர் கடைப்பிடிக்கவேண்டிய குறிக்கோள், தொழில்சார் தகுதி மற்றும் தொழில்சார் நடத்தையின் அடிப்படைக் கோட்பாடுகள் பரீட்சிக்கப் பட்டது. இந்த வினாவுக்கு AAT ஸ்ரீலங்காவின் நன்நெறிக்கோவை பற்றிய அறிவனைக் கொண்டு விடையளிக்க முடியும். கிட்டத்தட்ட சகல பரீட்சார்த்திகளும் இந்த வினாவுக்கு விடையளித்து நல்ல புள்ளிகள் பெற்றனர். சிலர் குறிக்கோள் என்பது நல்ல வெளியீட்டை வழங்குதல், கருத்திற் கொண்ட விடயம் பற்றிய அறிவு, உரியகாலத்தில் நேர்மையான அபிப்பிராயம் வெளியிடல், தெளிவான அறிவுடன் கணக்குகளை தயாரித்தல் போன்ற விடைகளை எழுதினர். அவர்கள் தகுதி என்பது ஏனைய தொழில்சார் துறையினருடன் போட்டி, நம்பத்தகு தன்மை, நேர்மை, உரிய கவனம் என்பதுபோன்ற விடைகளை எழுதியுள்ளனர். அத்துடன் தொழில்சார் நடத்தையென்பது முறையான நடத்தை, வேலைசெய்வதற்கான தகுதி, வியாபார எண்ணத்தை பொண்டிருத்தல், நல்ல மனப்பாங்கு, தலைமைத்துவ பண்பு, சுயநம்பிக்கை என எழுதினர்.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் அறிவு மட்டத்தை மேம்படுத்த கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்:</u>**

- கற்கைப் புத்தகத்தை நன்கு வாசித்து உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளல்.
- கணக்காய்வு தொடர்புபட்ட புத்தகங்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய பிரசுரங்களை வாசித்தல் வேண்டும்.
- வினாத்தாள் இறுதியில் உள்ள வினாவினைச் சொற்களின் பொருள்வரையறைகளை நன்கு விறங்கி அதன் அடிப்படையில் விடையெழுத வேண்டும்.
- கடந்த 5 வருட வினா, விடைகளை உற்றுவாசித்தல் அறிவு மற்றும் திறமையை விருத்தி செய்ய உதவும்.
- வினாவில் தரப்படும் கோட்பாடுகள் மற்றும் பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பினை விளங்கிக்கொள்ள வேண்டும்.
- கடந்த காலங்களில் கற்கைப் புத்தகத்திலிருந்து வினா எடுக்கப்பட்ட பகுதிகளை இனங்கண்டு அவற்றை விளங்கிக்கொள்ளல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் தெளிவாக விடையெழுத பழகிக்கொள்ள வேண்டும்.
- வினாத்தாளை பெற்றதும் அதில் தரப்பட்ட அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும.
- பரீட்சையில் வினாக்களை விளங்கி விடையெருதுவதற்கு ஏதுவாக தெளிவான மன நிலையை கொண்டிருத்தல் வேண்டும்.
- பரீட்சையில் நேர முகாமைத்துவம் முக்கியமானது. ஓவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கிய புள்ளிகளின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்க எடுத்துக்கொள்ள வேண்டிய காலத்தை மதிப்பிடலாம்.
- விடைகளை பொருத்தமாகவும், சரியான முறையிலும் இலக்கமிட்டக் காட்டுதல் வேண்டும்.
- கோட்பாடுகளுக்கும் பிரயோகத்திற்கும் இடையில் தொடர்பினை விளங்கிக்கொண்டு, தேவையான போது உதாரணங்களை எழுதவும்.
- விடைத்தாள்களை சமர்ப்பிக்க முன்னதாக அவை சரியாக உள்ளனவா என மீண்டும் சரிபார்க்க வேண்டும்.

\- * * * -